

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூ 5.70கோடி மதிப்பீட்டில் 161 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார் . உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாவது நினைவு தினத்தை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்று மலரஞ்சலி செலுத்தினர். இதில் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், உயர்கல்வித்துறை அமைச்சர் நேர்முக உதவியாளர் சோமாஸ் கந்தன், மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ். கே. வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிச்சந்திரன், கற்பகம், ஒன்றிய கழக செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், என்.சதாசிவம், உதயமுருகையில், கே.பழனியப்பன், மகா குமார் தாமஸ் ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், நாகை நகரக் கழக செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம்ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மயிலாடுதுறை கிட்டப்பா அங்கடி அருகே வைக்கப்ப்ட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி ( எ ) என்.செல்வராஜ், மயிலாடுதுறை காங்கிரஸ் கட்சி தலைவர் எஸ்.ராஜ்குமார் எம்.எல்.ஏ. மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக.வீரபாண்டியன்,மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், மற்றும் நகர, வர்டு கழகநிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதியில் ஆறாம் கட்டமாக கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சோமண்டார்குடி ஊராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும்,சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் கலந்து கொண்டு தலைமையேற்று முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று குறைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களின் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கி, திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார். இதில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம் பொள்ளாச்சியில் காந்தி சிலை அருகில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவருடைய திருவுருவப்படத்திற்கு கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் மலர் தூவி மரியாதை செலுத்தினர் . முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கழக மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் டாக்டர் மகேந்திரன், மாநில விவசாய அணி துணை தலைவர் தமிழ்மணி, கழக செயல்திட்ட குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், நகரச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், நகர மன்ற தலைவர் சியாமளா, வழக்கறிஞர் அதிபதி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதேபோல் வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அம்பராம்பாளையம் சுங்கம் பகுதியில் ஒன்றிய செயலாளர் ஹிமாலயா யுவராஜ் தலைமையில் திரண்ட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படம் அவரது நினைவுச் சின்னமான பேனாவிற்கு மரியாதை செலுத்தி சென்றனர்.



சேலம் மத்திய மாவட்டத்தில் அருந்ததிய மக்களுக்கு தலைவர் கலைஞர் 3% உள் இடஒதுக்கீடு வழங்கியதை உச்சநீதி மன்றத்தில் 7 நீதிபதிகள்அடங்கிய அமர்வு உறுதிசெய்ததையொட்டியும் சட்ட பாதுகாப்பு வழங்கிய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் அருந்ததிய மக்கள் தலைவர் கலைஞரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு, மேயர்.ஆ.ராமச்சந்திரன், மாநகர செயலாளர் பா. ரகுபதி பொதுக் குழு உறுப்பினர் சா.சுப்பிரமணியன் ஆகியோர் இருந்தனர்.



திருச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில், மாநகர செயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலையில் திருச்சி மத்திய மாவட்டம் சார்பில் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், முத்துச்செல்வம், காஜாமலை விஜி, விஜயா ஜெயராஜ், அம்பிகாவதி, பேரூர் தர்மலிங்கம், கண்ணன் செவந்தி லிங்கம், துர்கா தேவி, ராம்குமார், மோகன்தாஸ், இளங்கோ, நாகராஜ், கமல் முஸ்தபா கனகராஜ், பீ.ஆர்.பாலசுப்ரமணியன், ராமதாஸ், தர்மசேகர், வழக்கறிஞர் மணிவண்ண பாரதிமத்திய மாவட்ட மகளிர் அணி கவிதா, பந்தல் ராமு, சர்ச்சில் தஸ்தகீர், முகுந்தன், மாணிக்கம்,ஆதி நாயகி ரவி சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி சுதேசி மில் அருகில் மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் தி.மு.க.வினர் அமைதி பேரணியாகச் சென்று அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதைச் செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில், மாநில கழக அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, லோகையன், ஆறுமுகம், அருட்செல்வி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் பட்டுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலக வளாகத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாவட்டக் கழக நிர்வாகிகள் சு.ப.சேகர், ஆர்.பி.ரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, ஞா.மைக்கேள்ளமாள், ஒன்றியச் செயலாளர்கள் மு.கி.முத்து மாணிக்கம், வீ.கோவிந்தராசு, ஆர்.இளங்கோவன், க.அன்பழகன், கோ.இளங்கோவன், எம்..ஹெச்.அஸ்லாம், ராஜகோபாலன், பேரூர் செயலாளர் ஆர்.பி.முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் அ.மு.ரூஸ்வெல்ட், அ.தனபால், அ.அப்துல் மஸ்ஜித், கௌசல்யா கௌதமன் உள்ளிட்ட கழக சார்பு அணி நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.